# வேளாமீனைத் (SAWFISH) தேடும் செயல்பாடு

**கற்றலின் நோக்கம்:**


இந்தச் செயல்பாட்டின் நோக்கம் வேளாமீன்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களின் எண்ணிக்கையை விளக்குவதும், இந்த அச்சுறுத்தல்களைக் குறைக்க மக்கள் எவ்வாறு உதவுவது என்பது பற்றிய உரையாடலைத் தொடங்குவதும் ஆகும்.

**பின்னணி**

வேளாமீன் என்பது உலகில் மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளான மீன்களில் ஒன்று மற்றும் பல்வேறு அச்சுறுத்தல்கள் காரணமாக அதன் எண்ணிக்கை மற்றும் வரம்பு குறைக்கப்பட்டுள்ளன. இந்த அச்சுறுத்தல்களில் மீன்பிடித்தல் (வேளாமீன்கள் பெரும்பாலும் மீன்வலையில் தற்செயலாக மாட்டிக்கொள்கின்றன), வாழ்விட அழிவு (கடலோர மேம்பாடு, சதுப்புநில அழிவு, ஆறுகளில் அணைகளைக் கட்டுதல்), மாசுபாடு மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட கழிவுகளில் (தூக்கி எறியப்பட்ட வலைகள், மீன்பிடித்தல், பல்வேறு குப்பைகள் போன்றவை) ஆகியவை அடங்கும். சில இளம் வேளாமீன்களை முதலைகள் மற்றும் சுறாக்கள் சாப்பிடுவது போன்ற இயற்கை அச்சுறுத்தல்களும் ஏற்படுகின்றன. உலகெங்கிலும் உள்ள வேளாமீன்களின் எண்ணிக்கை மேலும் குறைவதைத் தடுக்க, மனிதனால் ஏற்படும் அச்சுறுத்தல்களைக் குறைப்பதன் மூலமும் அவற்றை அகற்றுவதன் மூலம் நீங்கள் வேளாமீன் பாதுகாப்பிற்கு உதவலாம்.

**தேவையான பொருட்கள்:**


- போஸ்டர். இந்த போஸ்டர் PDF வடிவத்தில் 300 dpi-இல் மூன்று அளவுகளில் கிடைக்கிறது (31 செ.மீ x 46 செ.மீ, 46 செ.மீ x 69 செ.மீ, அல்லது 61 செ.மீ x 91 செ.மீ). பரிமாணங்களை மாற்றுவது படத்தின் தரத்தைக் குறைக்கலாம்.



# வேளாமீனைத் (SAWFISH) தேடும் செயல்பாடு

**பாடம்:**

1. உலகெங்கிலும் உள்ள விலங்குகள் மற்றும் வாழ்விடங்களைக் கொண்ட கடலோரப் படங்களில் மறைந்திருக்கும் வேளாமீன்களைக் கண்டறிய பங்கேற்பாளர்களிடம் சொல்லவும். வேளாமீன்களைப் போலவே தோற்றமளிக்கும் வாள்மீன், கலிங்கன் முரல், துடுப்பு மீன் போன்ற பல மீன்கள் இருப்பதால் இது கடினமாக இருக்கலாம், ஆனால் இந்தப்படத்தில் ஒரே ஒரு வேளாமீன் மட்டுமே உள்ளது.



2. அவர்கள் வேளாமீனைக் கண்டுபிடித்த பிறகு, வேளாமீனுக்குத் தீங்கு விளைவிக்கும் எதையும் அவர்கள் பார்த்தார்களா என்று கேளுங்கள்? பல்வேறு ஆபத்துகளைச் சுட்டிக்காட்ட அவர்களிடம் கூறவும். சாத்தியமான ஆபத்துகள்:

   a. **அணை** – அணைகள் வேளாமீன்கள் நதிகளுடன் நகர்வதைத் தடுக்கின்றன, இதைச் சில இனங்கள் மீன்கள் வளர்ப்பிடமாகப் பயன்படுத்துகின்றன

   b. **கடற்கரையோர வளர்ச்சி/அழிக்கப்பட்ட சதுப்புநிலங்கள்** – வேட்டையாடும் மீன்களிடமிருந்து தன்னைப் பாதுகாக்கவும், இரையைத் தேடவும் சதுப்புநிலங்கள் மற்றும் பிற கரையோரப் பகுதிகளைச் சார்ந்து உள்ளது வேளாமீன்

   c. **மாசுபாடு/தப்பித்துச் செல்லுதல்** – மற்ற மீன்களைப் போலவே வேளாமீன்கள் வாழ்வதற்கும் ஒரு ஆரோக்கியமான சுற்றுச்சூழல் வேண்டும்

   d. **மீன் வலை மற்றும் மீன் பிடித்தல்** – வேளாமீன் பிடிக்கப்படுகிறது, பொதுவாக தற்செயலாக, அவற்றை வலைகளிலிருந்து அல்லது மீன்பிடி பாதைகளில் இருந்து வெளியேற்றுவதற்காக கொல்லப்படுகிறது.

e. **தூக்கி எறியப்பட்ட மீன் வலைகள்** – வேளாமீன்கள் காணாமல் போன மற்றும் தூக்கி எறியப்பட்ட வலைகளில் எளிதில் சிக்கி இறந்துவிடும்

f. **தூக்கி எறியப்பட்ட குப்பைகள்** (எ.கா., பிளாஸ்டிக் பைகள், 6-பேக் கொண்ட பிளாஸ்டிக் வளையங்கள்) - வேளாமீன்கள் தூக்கி எறியப்பட்ட குப்பைகளில் சிக்கி காயமடையலாம்

g. **முதலைகள் (இயற்கையான ஆபத்து)** – சில வகையான முதலைகள் இளம் வேளாமீன்களை வேட்டையாடுகின்றன

h. **சுறா மீன்கள் (இயற்கையான ஆபத்து)** – காளை சுறாக்கள் போன்ற சில வகையான சுறாக்கள் இளம் வேளாமீன்களை வேட்டையாடுகின்றன

3. அவர்கள் வெவ்வேறு அச்சுறுத்தல்களைக் கண்டறிந்த பிறகு, அச்சுறுத்தல்களிலிருந்து வேளாமீனை எவ்வாறு காப்பாற்ற முடியும் என்று அவர்களிடம் கேளுங்கள். சாத்தியமான தீர்வுகளில் உள்ளடங்குபவை:

a. அணை கட்டுவதைத் தடுத்தல், அணைகளை அகற்றுதல் அல்லது வேளாமீன்கள் வாழும் ஆறுகளில் அணைகளைச் சுற்றி அல்லது அணைகள் வழியாகச் செல்ல வழிகளை ஏற்படுத்துதல்

b. சதுப்புநிலங்கள் போன்ற வேளாமீன்கள் வாழும் பகுதிகளில் கரையோர வளர்ச்சியைத் தடுப்பதன் மூலமும், சதுப்புநிலங்களை ஏற்படுத்துதல் போன்ற கரையோர மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதன் மூலமும் வேளாமீன் வாழ்விடத்தைப் பாதுகாக்கலாம்.

c. உரங்கள், எண்ணெய்கள் மற்றும் பிற மாசுக்களால் நீர்வழித்தடங்களை மாசுபடுத்தக் கூடாது

d. வேளாமீன்கள் உள்ள பகுதிகளில் வலைகளைப் பயன்படுத்த வேண்டாம், SCS வேளாமீன்களை அடையாளம் காணல் மற்றும் துண்டுப் பிரசுரம் முறைகளைப் பயன்படுத்தி வேளாமீன்களை வலைகளில் இருந்து (அவற்றின் ரம்பத்திற்குப் பாதிப்பு இல்லாதபடி) பாதுகாப்பாக விடுவிக்கவும். (https://www.sawfishconservationsociety.org/international-sawfish-day)

e. ஆறுகள், கடல் அல்லது நிலத்தில் குப்பைகளைச் சேகரித்தல். தூக்கி எறியப்பட்ட மீன் தூண்டில்கள், வலைகள், குப்பைகள் போன்றவை பெரும்பாலும் ஆறுகள் மற்றும் கடலில் வீசப்படுகின்றன அல்லது அடித்துச் செல்லப்படுகின்றன.

f. சில சமயங்களில் இளம் வேளாமீன்களை முதலைகள் மற்றும் சுறாக்கள் உண்ணும் போது, அவை முக்கியமான வேட்டையாடும் உயிரினங்கள் என்பதால் அவற்றைக் கொல்லவோ வேளாமீன்களுக்கு உதவி செய்யவோ கூடாது. வேட்டையாடும் விலங்குகளிடமிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள வேளாமீன்கள் தங்கள் ரம்பங்களைப் பயன்படுத்தலாம்.

## கூடுதல் செயல்பாடு: வேளாமீன் என்பது என்ன?

**கற்றலின் நோக்கம்:**

ஒரு வேளாமீனை அடையாளம் காண்பது தான் இந்தக் கூடுதல் செயல்பாட்டின் நோக்கம்.

**பின்னணி**

வேளாமீன் என்பது சுறா போல நீண்ட பல்வரிசையுடன் கொண்ட ரம்பம் போன்ற அமைப்புடையது, அதனால் மற்ற மீன்களிலிருந்து இதை எளிதாக வேறுபடுத்தலாம். இருப்பினும், உலகின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் நீண்ட மூக்கு கொண்ட சுறாமீன், துடுப்பு மீன், கலிங்கன் முரல் போன்ற சில வகையான மீன்கள், வாள்மீன் போன்ற பல்வேறு பில்ஃபிஷ்கள் என பல்வேறு மீன்களை  வேளாமீன்கள் என அவ்வப்போது தவறாகப் புரிந்து கொள்கின்றனர். இந்த மீன்கள் தோற்றத்தில் வேளாமீன்களைப் போலவே இருந்தாலும், அவற்றை வேறுபடுத்திச் சொல்ல எளிதான வழிகள் உள்ளன.

**தேவையான பொருட்கள்:**


- போஸ்டர். இந்த போஸ்டர் PDF வடிவத்தில் 300 dpi-இல் மூன்று அளவுகளில் கிடைக்கிறது (31 செ.மீ x 46 செ.மீ, 46 செ.மீ x 69 செ.மீ, அல்லது 61 செ.மீ x 91 செ.மீ). பரிமாணங்களை மாற்றுவது படத்தின் தரத்தைக் குறைக்கலாம்.



# வேளாமீனைத் (SAWFISH) தேடும் செயல்பாடு

**பாடம்:**

1. பங்கேற்பாளர்களுக்கு ஒரு வேளாமீனை எவ்வாறு அடையாளம் காணலாம் என்று கூறுங்கள் (தலையில் நீளமான மற்றும் அகலமான பற்கள் கொண்ட ரம்பம், அவர்களின் தலையின் கீழ் 5 செவுள்துளைகள் மற்றும் தட்டையான சுறா போன்ற உடல்). பின்னர் மறைந்திருக்கும் வேளாமீன்களைக் கண்டறிய பங்கேற்பாளர்களிடம் சொல்லவும். நீண்ட மூக்கு கொண்ட சுறா, வாள்மீன், கலிங்கன் முரல், துடுப்பு மீன் போன்றவை வேளாமீன்களைப் போலவே தோற்றமளிக்கும் பல மீன்கள் இருப்பதால் இது கடினமாக இருக்கலாம்.




2. ஒரு பங்கேற்பாளர் வேளாமீனைத் தவிர வேறு ஒரு மீனைச் சுட்டிக்காட்டினால், அவர்கள் எந்த வகையான மீனைக் கண்டுபிடித்தார்கள் என்பதை விளக்கி, அந்த மீனுக்கும் வேளாமீனுக்கும் என்ன வித்தியாசம் என்பதை விளக்கவும்.


    a. **நீண்ட மூக்கு கொண்ட சுறா** என்பது ஒரு வேளாமீனைப் போன்ற ஒரு ரம்பம் கொண்ட ஒரு வகை சுறா ஆகும், ஆனால் நீளமான உணரிழைகள் (பெரிய மீசை போல் இருக்கும்) ரம்பம் பாதியளவு இருக்கும், அவற்றின் தலையின் ஓரத்தில் பக்கத்தில் 5 செவுள் துளைகள் உள்ளன, முழு வளர்ச்சியின் போது அளவு சிறியதாக இருக்கும். நீண்ட மூக்கு கொண்ட சுறா கடலில் வாழ்கின்றன.



b. வாள்மீன்கள் மற்றும் பிற பில்ஃபிஷ்கள் பெரிய எலும்பு மீன்களாகும். இதில் நீண்ட, மெல்லிய பற்கள் இல்லாத வாள் மற்றும் 1 செவுள் துளை தலையின் இரண்டு பக்கத்தில் உள்ளது. வாள்மீன்கள் மற்றும் பிற பில்ஃபிஷ்கள் கடலில் வாழ்கின்றன.



c. துடுப்பு மீன்கள் பெரிய, பழங்கால மீன்கள், இது தலையில் நீளமான, அகலமான மற்றும் பல் இல்லாத துடுப்பு அவற்றின் தலையின் ஒவ்வொரு பக்கத்திலும் 1 செவுள் துளை, ஒரு பெரிய இடைவெளி கொண்ட வாய் (திறந்திருக்கும் போது) போன்றவை உள்ளன. துடுப்பு மீன்கள் நன்னீர் ஆறுகளில் வாழ்கின்றன.



d. கலிங்கன் முரல் என்பது மெல்லிய உடல் மற்றும் கூர்மையான பற்கள் கொண்ட நீண்ட, குறுகிய வாய் மற்றும் தலையின் ஒவ்வொரு பக்கத்திலும் 1 செவுள் துளை கொண்ட எலும்பு மீன்கள். நன்னீர் ஆறுகள், ஏரிகள் மற்றும்/அல்லது கரையோரங்கள், விரிகுடாக்கள் போன்றவற்றில் பல்வேறு வகையான கலிங்கன் முரல் மீன்களைக் காணலாம்.

